விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 057 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 02 புதன்கிழமை (14.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இணையப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

இணையப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டமூல மொன்றைத் தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 15



வவுனியாவில்

## இளைஞன் மீது கத்திக்குத்து

(வவுனியா)

வவுனியா, கோவில்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் மீது கத்திக்குத்து இடம்பெற் றுள்ளதாக வவுனியா பொலி ஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சுந்தர புரம் பகுதியைச் 02

## மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### அநுரவிடம் ஐரோப்பியத் தூதுவர்



15

# தமிழர்களின் அரசியல் நலனில் பங்களிப்போம்

### சிறீதரன் எம்.பியிடம் கனேடியத் தூதுவர்

(கொழும்பு)

ஈழத் தமிழர் களின் அரசியல் நலன் சார்ந்து முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளுக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கத் தயார் என கனேடியத் தூதுவர் சிறீதரன் எம்.பியிடம் உறுதியளித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



சாந்தனை ஒரு வாரத்தில்

## இலங்கைக்கு அனுப்ப நீதிமன்றம் அனுமதி

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றச்சாட்டப்பட்ட சாந்தன் ஒரு வாரத்தில் இலங்கைக்கு செல்ல அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சென்னை மேல் நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசின் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியர் நாயகம் இதனை அறிவித்துள் 15

## 2024 ஜனாதிபதித் தேர்தல்
## 2025 பொதுத் தேர்தல்

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு ஜனாதி பதித் தேர்தல் நடத்தப்படு வதோடு 2025ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் தொடர் பில் ஜனாதிபதி 15

## போராட்டத்தை கைவிடுங்கள்

### சுகாதார தொழிற்சங்கங்களிடம் அமைச்சர் ரமேஷ் பத்திரண

(கொழும்பு)

மக்களின் நலன் கருதி அனைத்து சுகாதார தொழிற்சங்கங்களும் போராட் டத்தை கைவிடுமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண கோரிக்கை விடுத்துள் ளார். 15



24 மணி நேரத்தில்

## வாகன விபத்தில் ஐவர் பலி

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங் களில் நாட்டின் பல பகுதி களில் இடம்பெற்ற வாகன விபத்துக் 15

## சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய அனைத்துமே அத்தியாவசியமானது

### ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய பல சேவை நடவடிக்கைகளை அத்தியா வசிய சேவைகளாக பிரகட னப்படுத்தி அதிவிசேட வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இது வெளியிடப்பட் டுள்ளதாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதன்படி மருத்துவமனை கள், நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் நோயா ளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, போசனை ஊட்டல் மற்றும் சிகிச்சை தொடர்பாக தேவைப்படும் அல் லது செய்ய வேண் 15

கைதடியில்

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி ஊரி யான் மயானத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை இளம் குடும்பஸ்தருடைய சடலம் ஒன்று மீட்கப் பட்டுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 - 04 - 1993



இறப்பு
09 - 02 - 2024

## சுந்தரமூர்த்தி சிவசூரியன்

குடாரப்பு நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி மற்றும் சென்னை வளசரவாக்கத்தை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி சிவசூரியன் அவர்கள் கடந்த (09.02.2024) வெள்ளிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - ஸ்ரீரஞ்சனிதேவி தம்பதியரின் அன்பு மகனும் சிவானந்தம் - சகுந்தலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீமதி அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.02.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (MV House, No-04, Sri Lakshmi Nagar Main Road, Valasaravakkam Chennai - 600 087) இடம்பெற்று போரூர் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அல்வாய் கிழக்கு,**
**அல்வாய்.**

(C-8348)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# பெயர்மாற்ற அறிவித்தல்

ஏழாலை வடக்கு, ஏழாலையைச் சேர்ந்த திருகுலராசா வேறாபிநாத் ஆகிய நான் 14.02.2024 இன்று முதல் எனது பெயரை **ஹோபிநாத்** எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*தங்கள் உண்மையுள்ள*
**ஹோபிநாத்**

(18999)


# மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8343)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி **உ. மங்களவதனி** அவர்களின் அன்புச் சகோதரி



## திருமதி மங்களராணி மகாதேவன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தோற்றம் : 04.02.1950**
**மறைவு : 13.02.2024**

(19113)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்.**
**யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.**

# இளை...

சேர்ந்த இளைஞர் ஒருவர் வவுனியா, முதலாம் குறுக்குத் தெருபகுதியில்உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றியுள்ளார். இரவு குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரின்கோவில்குளம் பகுதியில் உள்ள வீட்டில்தங்கி நின்றுள்ளனர்.

இந்நிலையில், குறித்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கும், அங்கு பணியாற்றுபவருக்கும் இடையில் நேற்று காலை ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து வர்த்தக நிலைய உரிமையாளர் தன் மீது கத்தியால் பல இடங்களில் குத்தியதாக பாதிக்கப்பட்டவர் வவுனியா பொலிஸாரிடம் தெரிவித்தார்.

காயமடைந்தவர் சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஆவார்.

(ம-7.250)

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 11 - 1943



மறைவு
10 - 02 - 2024

## Dr. பொன்னம்பலம் இராமநாதன்

(ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல சித்த வைத்தியர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் கடந்த (10.02.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவடியைச் சேர்ந்த பிரபல சித்த வைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு வைத்தியர்) - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கலைவாணி (ஓய்வுநிலை பேராசிரியர்- யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புக் கணவரும் பரந்தாமன் (Cardiac Physiologist, Newzealand), பிரகலாதன் (Engineer, NHDA, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் பபிதா (NewZealand), Dr.கிருசாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீராம், லக்ஸ்மன், ஆதித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் Dr.ஆறுமுகராஜா (UK), Dr.விவேகானந்தன் (UK), புவனேஸ்வரி (India), ஈஸ்வரி (Colombo) மற்றும் காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வாசவன் (Colombo), மோகன் (Germany), கலாராணி (Canada), உசாலினி (Germany), கயல்விழி (Canada), தசவரதன் (Canada) மற்றும் காலஞ்சென்ற ஆதவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுதுமலை வீதி,**
**தாவடிச் சந்தி.**

(C-8349)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## நவரத்தினம் ரூபவதி

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் இல. 63/3, கணேசபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் ரூபவதி அவர்கள் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற குணரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் யோகவதனி (கணேசபுரம்), கிருஸ்ணவேணி (கிச்சா - திருவையாறு), இந்திரகுமார் (உரும்பிராய்), ஜெயக்குமார் (சுவிஸ்), உதயகுமார் (நோர்வே), ஜெயந்தினி (கணேசபுரம் - ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகரத்தினம் (பாப்பா), காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் ரஞ்சினி (உரும்பிராய்), சுதாஜினி (பாமா - சுவிஸ்), ரதிவேல்நாயகி (நோர்வே), பிரேம்குமார் (அதிபர் - கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சறோஜினிதேவி (கணேசபுரம்), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மிருணாளினி (யாழினி - லண்டன்), காலஞ்சென்ற நிரூஜன் விதுர்சன் மற்றும் தினோத் (பிரான்ஸ்), ரிதுர்சன் (ஷான் ஸ்ரூடியோ அன் பான்சி, A9 வீதி, கிளிநொச்சி), லதுசன் தனுசன் (நோர்வே), ஜென்சிகா ஜெதுர்சன் (சுவிஸ்) ரமனதாசன் (லண்டன்), செரின் (பிரான்ஸ்), கிசி (சுவிஸ்) ஆகியோரின் பேத்தியாரும் அக்சயன், அஸ்விதன் (லண்டன்), திஷா, நிரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2024) புதன்கிழமை அன்னாரின் கணேசபுரம் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ந.இந்திரகுமார் - 077 615 2345,**
**ம.பிரேம்குமார் - 077 711 5896**

(C-8347)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார ஊழியர்களின் பகிஷ்கரிப்பால்

# நோயாளர்கள் பெரிதும் பாதிப்பு

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியில் நேற்று முதல் சுகாதாரப் பணியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.**





சுகாதார பணியாளர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ் கரிப்புக் காரணமாக நோயா ளர்களும் பொதுமக்களும் பெரிதாகப் பாதிக்கப்பட்டு ள்ளனர்.

குறிப்பாக இரத்த மாதிரி களை பெறுதல் மற்றும் இரத்த பரிசோதனைகள் என்பனவும் மேற்கொள்ளப் படாமையினால் பல நோயா ளர்கள் திரும்பிச் சென்று ள்ளதோடு, மருந்துகளை பெறுவதிலும் பலர் சிரமங் களை எதிர்கொண்டிருந்த னர். (நி-6)

## ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 975 மில்லியன் ரூபாய் செலவாகும்

### என்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 975 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள் ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்ட த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 2023 ஓகஸ்ட் மாதம் 10 பில்லியன் ரூபாய் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் 2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட் டதாக தேர்தல்கள் ஆணையா ளர் சமன் ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

இதேநேரம் பொதுத்தேர் தலை நடத்த வேண்டும் எனில் இதேபோன்ற ஒரு ஒதுக்கீடு அவசியம் என்றும் இந்த ஒதுக் கீடு இரண்டு தேர்தல்களை நடத்த போதாது.

எவ்வாறாயினும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர் தல் மற்றும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மை யில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித் திருந்தார்.

இதேநேரம் இரண்டு தேர் தல்களை நடத்துவதற்கு அரசா ங்கத்திடம் போதிய நிதி இல்லை என குறிப்பிட்டுள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, இந்த வருடம் நிச்சயம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என் றும் உறுதியாக தெரிவித்துள் ளார். (நி-6)

## அமெரிக்கத்தூதுவர்-வர்த்தக அமைச்சர் சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் மற்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகி யோருக்கு இடையில் கலந் துரையாடல் ஒன்று இடம்பெற் றுள்ளது.

இச்சந்திப்பில் அதிகரித்து வரும் பொருட்களின் விலைக ளைக் குறைப்பதற்கும் பண வீக்கத்தைக் குறைப்பதற்கும் இலங்கை தனது சந்தையை விரிவுபடுத்த வேண்டுமென அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அத்துடன் உற்பத்திச் செல வைக் குறைத்தல், அறுவடை க்குப் பின்னரான சேதங்களைத் தடுப்பது மற்றும் நாட்டின் உண வுப் பாதுகாப்பை அதிகரிப்பதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைப்பதில் வர்த்தக அமை ச்சு கவனம் செலுத்தியுள்ள தாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

மேலும் தன்னிறைவுப் பொரு ளாதார அமைப்பிற்குத் தேவை யான புதிய தொழில்நுட்ப அறி வும் சிறுதொழில் முயற்சியா ளர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான ஆதரவும் வழங் கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ரணிலை ஆதரிக்க முடியாது நாமல் அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக் கிரம சிங்கவின் அனைத்து திட்டங்களையும் யோசனை களையும் சிறிலங்கா பொது ஜன பெரமுன ஆதரிக்காது என அந்த கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

சிறிலங்கா பொதுஜன பெர முனவின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனா திபதியாக தெரிவு செய்யப் பட்டாலும் அவர் மேற்கொள் ளும் அனைத்து தீர் மா னங்களுக்கும் ஆதரவளி க்க வேண்டிய அவசிய மில்லை என அவர் குறிப்பிட் டுள்ளார். (நி-6)

## யுக்திய நடவடிக்கை தொடரும்

### பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் அல்லது பாரா ளுமன்றம் பணிப்புரை விடுத்தால் மாத் திரமே யுக்திய நடவடிக்கை நிறுத்தப் படும் என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் வர்த்தகம் மற் றும் திட்டமிட்ட குற்றச் செயல்களை முழுமையாக ஒழிக்கும் வரையில் இந்த யுக்திய நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம்.

நாட்டிலுள்ள சிலர் சத்தம் போட்டாலும் ஒட்டுமொத்த நாட்டு மக்களை பாது காப்பதற்கு இந்த யுக்திய நடவடிக்கையை தொடருமாறு நான் கோரிக்கை விடுத் துள்ளேன்.

இந்த நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு மகா சங்கத்தினரும் தொண்ணூற்று ஒன்பது வீதமான நாட்டு மக்களும் கோருகின்றனர்.

எனவே ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது பாராளுமன்றமோ இதனை நிறுத்துமாறு அறிவிக்கும் வரையில் இதனை நாம் தொடர்ந்து முன்னெடுப் போம் என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரி வித்தார். (நி-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. சங்கரராஜசர்மா இராஜராஜேஸ்வரன்

B.A(Hons) Geo.Spl, M.A (Merit)
PGDE, SLPS III

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்று மன்/கட்டுக்காரன் குடியிருப்பு றோ.க.த.க பாடசாலைக்கு அதிபராகக் கடமையேற்றுள்ள திரு.ச.இராஜராஜேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பதவி உயர்வு பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# யாழ்.பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட போட்டி சம்பியனான கலைப்பீட மாணவிகள் அணி

யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் கலைப்பீட மாணவிகள் அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கலைப்பீட அணியை எதிர்த்து இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு அணி மோதியது.

பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். இதனால் முதல் பாதியாட்டத்தில் 6:6 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கலைப்பீட அணியினர் ஆட்ட நேர முடிவில் 19:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.



3 ஆம் இடத்தை சித்த மருத்துவபீட அணியினர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# சூப்பர் லீக் சுற்றுக்கு தகுதி பெற்ற அச்செழு, சிவானந்தா அணிகள்






யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் அச்செழு வளர்மதி மற்றும் சிவானந்தா அணிகள் சூப்பர் 12 லீக் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டிகள் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் அணி மோதியது.

இதில் அச்செழு வளர்மதி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சூப்பர் லீக்கிற்கு தகுதி பெற்றுள்ளது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணி மோதியது. இதில் சிவானந்தா அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சூப்பர் லீக்கிற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வடமராட்சி லீக் அனுமதியுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பலாலி விண்மீன் அணியை எதிர்த்து ஊரெழு பாரதி அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு இமையாணன் மத்தி அணியை எதிர்த்து கொற்றா வத்தை சிவானந்தா அணியும் மோத உள்ளன. (நி-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 14.03.2024 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.03.2024 மற்றும் 16.03.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம். |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும் ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும் ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021-222 2601**

(சி-8342)

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

# மீண்டும் வைத்தியசாலைகளில் களமிறக்கப்பட்ட இராணுவம்

(கொழும்பு)

சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக முடங்கியிருந்த வைத்தியசாலைகளின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத்தினர் மீண்டும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பினை நேற்று ஆரம்பித்துள்ளன.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளின் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உதவுமாறு சுகாதார அமைச்சு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் பேரில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே, இராணுவ வீரர்களை வைத்தியசாலைகளுக்கு அனுப்புமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (நி-6)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## 2024 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 01.03.2024ஆம் திகதி தொடக்கம் 31.12.2024ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கோரப்பட்டுள்ளன.

பகிரங்க ஏலம் இடம்பெறும் காலம் : 21.02.2024ஆம் திகதி மு.ப 11.00 மணி
பகிரங்க ஏலம் இடம்பெறும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

**2024ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படும் ஏல வைப்புப் பணம் | 2024ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த ஏலத்தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 5,000.00 | 114,583.34 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக்கடை இல 02 | 5,000.00 | 641,941.67 |
| 2 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 1,551,254.60 |
| 3 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 806,824.47 |

குறிப்பு:- ஏலம் இடம்பெறும் குறித்த தினத்தில் மு.ப10.45மணிக்கு முன்னர் மீளளிக்கப்படும் ஏல வைப்புத் தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்பவர்கள் மாத்திரம் ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
**14.02.2024.**

(சி-8344)

# செயற்கை நுண்ணறிவு கற்கை நெறி அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

கல்வி அமைப்பில் செயற்கை நுண்ணறிவு கற்கை நெறியை அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான தேசிய மூலோபாயம் மற்றும் திட்டத்தை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட பணிக்குழு அளித்த பரிந்துரைகளின்படி கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அந்த முன்னோடித் திட்டங்களின் ஒரு பிரிவாக சாதாரண கல்வி முறைமையில் செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்துவதற்கான செயற்திட்டம் அமுல்படுத்தப்படும்.

மைக்ரோசொப்ட் ஆதரவுடன் கீழ்க்கண்டவாறு முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-6)

## பெயர் மாற்ற அறிவித்தல்

சோதி வேம்படி வீதி, மானிப்பாயைச் சேர்ந்த இளையதம்பி கனகம்மா ஆகியநான் 14.02.2024 இன்று முதல் எனது பெயரை தேம்பாமலர் எனப் பெயர்மற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள**
**திருமதி.இளையதம்பி தேம்பாமலர்.**

(18996)

# இராசிபலன்

14.02.2024
மாசி 02, புதன்கிழமை
பஞ்சமி முன்னிரவு 6.33 மணிவரை

ரேவதி பிற்பகல் 4.43 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை

விபூதிப் புதன்
சந்திராஷ்டமம்
மகம், பூரம்

**வளவன்**

**மேஷம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, சயனசுகக்குறைவான நாள், அலைச்சல்கள் சற்று கூடும்.

**கடகம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள்வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**
உள்ளம் மகிழும் சம்பவமொன்று இல்லத்தில் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**
தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்**
தொழில் ரீதியான சில குழப்பங்கள் தோன்றி மறையும், பொது வாழ்வில் கௌரவம் குறைவடையும் வாய்ப்புண்டு, உடல் நலனில் அதிக அக்கறை கட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம்காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், பூர்வீகச்சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்**
செல்வ நிலை உயரும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.

**மிதுனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் உற்சாகம் கட்டுவீர்கள்.

**கன்னி**
கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் கணும் நாள்.

**தனுசு**
சுபகாரியங்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், கூட்டு முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**மீனம்**
சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாடு ஆனந்தம் தரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்பபுண்டு.

வேலை [illegible] வாழ்வு புனிதமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கால், மதவுகள் சீரின்மையால் வெள்ளம் தேங்கி நெற்பயிர்கள் அழிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தின் கச்சாய் மற்றும் அல்லாரைக் கிராமங்களில் வாய்க்கால்கள் மற்றும் வீதிகளில் உள்ள மதவுகள் சீரின்மை காரணமாக வெள்ளம் தேங்கி நெற்பயிர்கள் தொடர்ச்சியாக அழிவடைவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போதே மேற்படி விடயம் தொடர்பாக நெற்செய்கையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாரி காலத்தில் தென்மராட்சியின் கெற்பேலிக் கிராமத்தில் உள்ள நீர்நிலைகள் நிறைந்து கச்சாய் மற்றும் அல்லாரை வயல் வெளிக்கு பிரவேசிக்கும் வெள்ளத்தை கடலுக்குள் கடத்த முடியாத நிலை காணப்படுகிறது.

வீதி அபிவிருத்திகளின் பின்னரே வெள்ள நீர் கடலுக்குள் கடத்தப்படுவது சிக்கலாக இருப்பதாகவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (நி-6-30)

# கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய கொடியேற்றம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை, கன்னாதிட்டி காளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத்திருவிழாவும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்கும் நிகழ்வும் இடம்பெறும் என தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# மாசிமக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மாசிமக இலட்சார்ச்சனை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு இன்று தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி விரை அம்பாளுக்கு விஷேச அபிஷேகம், நவசக்தி அர்ச்சனையும் இடம்பெற்று மாசிமகத்தினத்தன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அஸ்டோத்தரசத சங்காபிஷேகமும் மாலை இலட்சார்ச்சனை பூர்த்தியும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

# கட்டாக்காலி நாய்களால் மக்கள் அசௌகரியம்

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரிப்பால் பொதுமக்கள் அசௌகரியத்திற்குள்ளாகின்றனர்.

குறித்த பகுதியில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரிப்பால் சந்தைக்கு வரும் மக்களில் சிலர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளதோடு வீதி விபத்துக்கள் ஏற்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கு வருகை தரும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-60)

# விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் பொறியியல் விஞ்ஞான சிறப்பு மாணி 2023/2024 கற்கைநெறிக்கு விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) அல்லது பிராந்திய அலுவலகம் ஊடாக விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021 222 3374 ) தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (நி)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3040

கௌசிகன்




சியி




கௌரி




சிந்து




ஐஸ்வரியா




ஆனந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நோய்களை எதிர்க்க சமனான ஊட்டச்சத்தான உணவு தேவை



பேராசிரியர்
கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை.

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பொருளாதார நெருக்கடி முதியவர்களை, பெண்களை, இளவயதினரை குறிப்பாக குழந்தைகளை ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களாக மாற்றிக் கொண்டிருக்கும் செய்தி பரவலாக வந்திருக்கின்றது. இதுவொரு அவசரமான அறைகூவலாக சுகாதாரப் பகுதியிலிருந்து விடுக்கப்பட்டிருக்கின்றது. வெறுமனே இதனை நாம் அலட்சியம் செய்யக் கூடாது. பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு குடும்பத்தையும் தனிமனிதனது வாழ்வாதாரத்தை எதிர்பாராத விதமாக பாதித்திருக்கின்றது. குறிப்பாக நிதி நெருக்கடிக்குள் சிக்கி அன்றாடம் தப்பிப் பிழைத்து வாழும் மக்களும் மனைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல் அல்லல்படும் மக்களும் இந்த ஊட்டச்சத்து குறைபாடு (Malnutrition) என்னும் பொறிக்குள் வீழ்ந்து விடுவது சுலபமாகியுள்ளது.

இதற்கான பரப்புரைகளை மக்களுக்கு இன்னும் இன்னும் வலுப்படுத்துவதோடு ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்திக்கும் அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளிலும் நாம் அவசியம் இறங்க வேண்டியவர்களாகி இருக்கின்றோம். ஒவ்வொருவரின் மனையிலும் நிதி நெருக்கடியேற்படும் போது சமனான ஊட்டச்சத்தான உணவை அவர்கள் உண்பதற்கான வாய்ப்புக்களை தாமாகவே இழக்கின்றார்கள். வளர்ந்துவரும் எதிர்கால சந்ததியான குழந்தைகள் இந்த பாதிப்புக்குள் உள்வாங்கப்பட்டால் அவர்களை மீட்டு வளமான சந்ததியாக வளர்த்தெடுக்க ஒவ்வொரு பெற்றோரும் மிகுந்த சிரமத்தை சந்திக்க வேண்டியிருக்கும். ஊட்டச்சத்து நலிவடையும் போது தானாகவே உடலில் எதிர்ப்புசக்தி நலிவடைந்து செல்லும்.

இதன் மூலம் அவ்வப்போது பரவிவரும் தொற்று நோய்களான வைரசு நோய்கள் இலகுவில் எம்மை தொற்றிக் கொள்வதோடு எமது உடலை உலுக்கியும் விடும்.

உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின் படி ஊட்டச் சத்து குறைபாடு என்பது மூன்று வகைப்படும். ஒருவரின் உயரத்திற்கு தேவையான நிறையில் போதாமை (Low weight for Height). ஒருவருடைய வயதிற்கான உயரத்தில் குறைபாடு (Low height for age) மற்றும் ஒருவருடைய வயதிற்கான நிறைபோதாமை (Low weight for age) ஆகும். இவற்றுடன் நுண்ணூட்டச்சத்து போதாமை அல்லது அதிகமாக இருப்பதான நிலையிலும் நுண்ணூட்டச்சத்தில் குறைவிடாது தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை உணவுடன் வழங்க வேண்டியது அவசியமாகும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...





பெற்றோர் தம்முடைய ஊட்டச் சத்து குறைபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு தாம் பெற்றெடுத்த குழந்தைகளுக்கான தினமும் மூன்றுவேளை உணவுக்காக கையேந்தி நிற்கும் நிலையில் இருந்து விடுபட நாடு ரீதியான பொறி முறையை மேலும் வலுப்படுத்தல் வேண்டும்.

உலகளாவிய ரீதியில் 2014 இல் 462 மில்லியன் மக்கள் குறைவான உடல் நிறையைக் கொண்டிருந்து போது 1.9 பில்லியன் மக்கள் அதிகமான உடல் நிறையைக் கொண்டிருந்தது அறியப்பட்டது. 2016 இல் 5 வயதிற்கு குறைவான 155 மில்லியன் குழந்தைகள் உடல்நிறை குறைவாகவும் உயரத்தில் குறைவானவர்களாகவும் காணப்பட்டபோது 41 மில்லியன் குழந்தைகள் அதிகரித்த உடல்பருமனைக் கொண்டவர்களாக காணப்பட்டமையும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. எமது நாட்டின் அண்மைக்கால தரவுகள் தென்னாசியாவிலேயே அதிகரித்த ஊட்டச்சத்து குறைபாடுள்ள 5 வயதுக்கு குறைவான குழந்தைகளைக் கொண்டு இரண்டாம் நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் 17 சதவீதமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிர, வயது வந்த பெண்கள் ஊட்டச்சத்து குறைபாடால் மீண்டும் பாதிக்கப்பட்டிருப்பதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 2000 ஆண்டளவில் கிட்டத்தட்ட 40 சதவீதமாக இருந்த ஊட்டச்சத்து குறைபாடு கணிசமான அளவு 2010 ஆம் ஆண்டளவில் 30 சதவீதமாக குறைந்து தற்போது மீண்டும் 37 சதவீத புள்ளி நிலையை அடையும் நிலைக்கு வந்திருக்கின்றது. இதற்கு அவர்களின் மனைப்பொருளாதாரத்தின் நிதிநிலைமை முக்கயமான காரணமாக முன்வைக்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி நிலை விரைந்து தீர்க்கப்படக்கூடியதொன்றல்ல என்பதனால் பெண்களின் குறிப்பாக தாய்மையடையும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் காண வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

எதிர்பார்த்திருக்கும் வழிவகைகள் அனைத்தும் சாதகமான நிலையில் எமக்கு இல்லையென்பதனை புரிந்து கொண்டால் இவர்களுக்கான சமனான ஊட்டச்சத்தான உணவை பெறுவதற்கான வழிவகைகளையும் அவர்களுக்கான அன்றாடம் அவசியத் தேவைக்கான பணத்தை பெறுவதற்கான வழிவகைகளையும் அவர்களாகவே பெறுவதற்கான செயற்றிட்டமாகவே மனைத் தோட்டத்தை பரிந்துரைத்திருக்கின்றனர். கிராம சந்தைகளை (Village markets) உருவாக்கினால் தமது மனையில் பெறும் உணவில் மேலதிகமானதை சிறியளவிலேனும் விற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களுக்கான வருமானத்தை பெருக்கும் வழிமுறைக்கு அந்தந்தப் பகுதியின் பொறுப்பு வாய்ந்தவர்கள், நலசேவையாளர்கள் வித்திட வேண்டும்.

கொவிட் 19 ஐ கடந்து தற்போது கோஸ்ட்டா 2 என்னும் தொற்று நோயையும் கடந்து இன்னும் வைரசு நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமே. இதைப்பற்றி விவாதிக்கும் போது கொவிட் 19 இல் பெற்ற அனுபவத்தை பாடமாக்கி இன்னொரு நுண்ணங்கித்தாக்கம் பெரிதாக உணரப்படுவதற்கு முன்னதாக உணவுற்பத்தியை அவரவர் மனைகளில் ஊர்களில் பெருக்கி அதில் தேவையான ஊட்டச்சத்தினை அனைவரும் குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியாக வேண்டும்.

வருமுன் காப்போம் என்பதனை நாம் மீண்டும் மீட்டிப் பார்க்க வேண்டிய நிலையில் எமது மக்களை மீண்டும் ஏற்படக்கூடிய நுண்ணங்கி மற்றும் வேறெந்த வகையான பேரிடரிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எமது உடலில் தேவையான நோயெதிர்ப்பு சக்தியை இயற்கையாக நாம் ஏற்படுத்திக் கொண்டால் இவ்வாறான பேரிடர்களிலிருந்து எம்மை காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

எமக்கான சமனான ஊட்டச் சத்தான உணவை நாம் அனைவரும் இணைந்து உற்பத்தி செய்வதற்கான செயல் முறையை முனைப்புடன் முடுக்கிவிட வேண்டியதன் அவசியம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இந்த அறை கூவலுக்கு முன்னுரிமை கொடுத்து இனிவரும் எந்த நோய் பேரிடர்களிலிருந்தும் எம் இனிய உறவுகளை காப்பாற்றியே ஆக வேண்டும்.

# அதிகரிக்கும் வறட்சி
## அதிகளவு நீர் அருந்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது வெப்பமான சூழ்நிலை நிலவுவதால் உடலில் ஏற்படும் நீரிழப்பில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறிப்பாக சிறுவர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஆயுதப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் நீரிழப்புக்கு ஆளாக நேரிடும் என கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால்பெரேரா தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், களைப்பு, தூக்கம், சோர்வு, தலைவலி, வாந்தி மற்றும் பசியின்மை ஆகியவை நீரிழப்புக்கான அறிகுறிகளாகும்.

எனவே, நீரிழப்பு ஏற்படாமல் இருக்க, பொதுமக்கள் தொடர்ந்து நீர் அருந்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மழையுடனான வானிலையை எதிர்பார்க்கலாம் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஏப்ரல் மாதம் வரையில் வறட்சியான வானிலையே நிலவும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கைதிகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சுமார் 400 பேர் சிறைகளுக்கு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழ்நிலையில் சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலை நிர்வகித்து கைதிகளை தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் சிறைச்சாலைகளில் உள்ளவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## கலவர பூமியானது ஹரியானா!

# கண்ணீர் புகைக் குண்டுகள் வீசி விவசாயிகள் விரட்டியடிப்பு

(டில்லி)

**பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேச மாநிலங்களை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் சங்கத்தினர் நேற்றுக் காலை டில்லியை நோக்கி ஆயிரக்கணக்கான டிராக்டரில் பேரணி சென்றனர்.**





தேசிய நெடுஞ்சாலையில் ஷம்பு எல்லையை நோக்கி விவசாயிகளின் ட்ராக்டர் டிராலிகள் அணிவகுத்து செல்கின்றன.

இப்போராட்டத்தில் விவசாயிகளுடன் முதியவர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் என குடும்பத்தினரும் ட்ராக்டரில் அமர்ந்து சென்றனர்.

ஹரியாணாவில் உள்ள அதிகாரிகள் அம்பாலா, ஜிந்த், ஃபதேஹாபாத், குருஷேத்ரா, சிர்சாவில் பல இடங்களில் கொங்கிரீட் தடுப்புகள், ஆணிகள், முட்கம்பிகளைப் பயன்படுத்தி பஞ்சாப், ஹரியானாவிலிருந்து டில்லி செல்லும் எல்லைகளை அடைத்துள்ளனர்.

பஞ்சாப் - ஹரியானா எல்லைகளில் பல இடங்களில் தண்ணீர் பாய்ச்சியடிக்கும் வாகனங்கள் உள்ளிட்ட கலவரக் கட்டுப்பாட்டு வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஏராளமான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஹரியானா அரசு 15 மாவட்டங்களில் 144 தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் அம்பாலாவில் உள்ள ஷம்பு எல்லையை அடைந்த விவசாயிகள் தடுப்புகளை உடைக்க முற்பட்டனர்.

அப்போது பேரணி குழுவினர் மீது ஹரியானா பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

இதனால் அந்த இடத்திலிருந்து அனைவரும் சிதறி ஓடினர்.

அப்பகுதி முழுவதும் புகை மூட்டமாக மாறியது. கண்ணீர் புகைக் குண்டு வீசப்பட்ட சம்பவத்தால் விவசாயிகள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மரண தண்டனை விதிக்கப்பட்ட எட்டு இந்தியர்கள் விடுதலை

(கட்டார்)

கட்டாரில் உளவு பார்த்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த இந்திய முன்னாள் கடற்படையினர் 8 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் ஏழு பேர் தற்போது நாடு திரும்பியுள்ளதாக இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியுறவு துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் "தஹ்ரா குளோபல் நிறுவனத்தில் பணியாற்றிய 8 இந்தியர்களை கட்டார் அரசு விடுதலை செய்திருப்பதை இந்தியா வரவேற்கிறது.

அவர்களில் 7 பேர் இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனர். இந்தியர்களின் விடுதலையையும் அவர்களை நாட்டுக்கு அனுப்பிய முடிவையும் எடுத்ததற்கு கட்டார் மன்னரை பாராட்டுகிறோம்" என்று கூறப்பட்டுள்ளது.

டோஹாவில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றிய 8 இந்தியர்கள் உளவு பார்த்த குற்றச்சாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## காசாவின் ரஃபா பகுதியில் 1.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்வு

(ஜெருசலேம்)

காஸாவின் ரஃபா பகுதி உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றாகும் என்று யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

அதன்படி இங்கு சிறுவர்கள் அதிகமாக உள்ளனர் என்றும் அவர்களில் பலர் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் போரினால் இடம்பெயர்ந்த 1.3 மில்லியன் மக்களில் 600,000 பேர் சிறுவர்கள் என்றும் அவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு இடமில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)



## இறக்கத்
## உலக பெ
### சர்வதேச

(வோஷிங்டன்)

பல தசாப்தங்களாக நிலவும் கடுமை
வட்டி விகித உயர்வுகளுக்குப் பின்னர்
பொருளாதாரம் ஒரு மென்மையான இறக்க
சந்திக்கும் என சர்வதேச நாணய நி
தெரிவித்துள்ளது.

டுபாயில் இன்று நடைபெற்ற உச்சி மாந
கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்
சர்வதேச நாணய நிதியத்தின் நிறை
பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இ
தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் வட்டி விகிதங்கள்
டின் நடுப்பகுதியில் குறையத் தொட
என்றும் இதற்காக உலகப் பொருளா
தயாராக இருக்கின்றது என்பதில் தாம் மி
நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர்
பிட்டுள்ளார்.

மேலும் கொரோனா தொற்றுக்கு பி
இஸ்ரேலுக்கும் ஹமாஸ்"க்கும் இடையி
போர் நீடித்தால் உலகப் பொருளாதாரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஃபாவில் இஸ்ரேல் தாக்குதல்

# சுமார் 100 பொதுமக்கள் உயிரிழப்பு

**(ஜெருசலேம்)**

**ரஃபாவில் இஸ்ரேல் மேற்கொண்ட வான் வெளி தாக்குதல் காரணமாக 100 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**



ரஃபாவை இலக்குவைத்து இஸ்ரேல் மேற்கொண்ட தீவிர மான விமானத்தாக்குதல்கள். எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக குழந்தைகள் சிறுவர்கள் உட்பட 100 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பாலஸ்தீன செம்பிறை சமூகம் தெரிவித்துள்ளது.

நகரின் பல பகுதிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காரணமாக 100இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

எல்லைப்பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. இஸ்ரேலின் தாக்குதலில் காயமடைந்தவர்கள் கொல்லப்பட்டவர்கள் இடிபாடுகளிற்குள் உள்ளதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என செம்பிறை சமூகம் அச்சம் வெளியிட்டுள்ளது.

ஆக்கிரமிப்பு இஸ்ரேலின் குண்டுவீச்சினால் அதிகளவானவர்கள் காயமடைந்துள்ளனர் அவர்களிற்கு சிகிச்சை வழங்குவதற்கான வளங்கள் இல்லை என அபுயூசெவ் அல் நிஜார் மருத்துவமனையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ரஃபா மருத்துவமனைக்குள் குழப்பமான நிலை காணப்படுவதை காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன என சிஎன்என் தெரிவித்துள்ளது.

குழந்தையொன்றை காப்பாற்றுவதற்கு மருத்துவர்கள் போராடுவதை காண்பிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.

யப்னா முகாமில் இரண்டு மசூதிகள் தாக்கப்பட்டதில் அங்கு தஞ்சமடைந்திருந்த பெருமளவானவர்கள் உயிரிழந்துள்ளனர். குவைத் மருத்துவமனையை சூழவுள்ள பகுதிகளிலும் எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்றுள்ளன. (நி-6)

# ...த்தை சந்திக்கும் ...பொருளாதாரம்

## ...தச நாணயநிதியம்

...கடுமையான
...பின்னர் உலகை
...ன இறக்கத்தை
...ணய நிதியம்

...ச்சி மாநாட்டில்
...க்கும் போதே
...நிறைவேற்று
...ஜீவா இவ்வாறு

...ங்கள் ஆண்
... தொடங்கும்
...பாருளாதாரம்
... தாம் மிகவும்
... அவர் குறிப்

...யுக்கு பின்னர்
...இடையிலான
...தாரங்களை



பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேநேரம் செங்கடலில் கப்பல்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களால் ஏற்படும் விளைவுகளும் ஒட்டுமொத்த உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா [illegible]துள்ளார். [illegible]

# நவாஸ் ஷெரீப்-பிலாவல் பூட்டோ கூட்டணி எதிர்க்கட்சி வரிசையில் இம்ரான் கட்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெற்ற நிலையில் வாக்குப்பதிவு முடிந்தகையோடு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.



வாக்கு எண்ணும் நடவடிக்கை முடிவடைந்த நிலையில் இம்ரான் கான் கட்சி 93 இடங்களிலும் நவாஸ் ஷெரீப் கட்சி 75 இடங்களிலும் பிலாவல் பூட்டோ கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. மற்ற கட்சிகள், சுயேட்சைகள் 42 இடங்களை பிடித்துள்ளன.

மொத்தம் 264 இடங்களில் ஆட்சியை பிடிக்க 133 இடங்கள் தேவை. தனிப்பட்ட கட்சி அளவில் எடுத்துக் கொண்டால் இம்ரான்கான் கட்சி அதிக இடங்களை பிடித்துள்ளது.

நவாஸ் ஷெரீப் மற்றும் பிலாவல் [illegible]த்து மற்ற கட்சிகளுடன் சேர்த்து பார்த்தால் இம்ரான்கானுக்கு சரியாக 135 இடங்கள் வரும். இது ஆட்சி அமைக்க போதுமானது.

ஆனால் நவாஸ் ஷெரீப் பிலாவல் பூட்டோ கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளார். இதை இரண்டு கட்சி தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்றியிருந்தாலும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்துள்ளதாக முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் கட்சி அறிவித்துள்ளது.

(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தினை நீக்கும் தருணம் இதுவல்ல

## சஜித் கடும் சீற்றம்

(கொழும்ப)



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான உகந்த தருணம் இதுவல்ல என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் போர்வையில் அரசாங்கம் இந்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் ஒத்தி வைப்பதற்கு முயற்சிக்கின்றது.

இதற்கு நாம் இடமளிக்கபோவதில்லை. நிறைவேற்று அதிகாரம் கொ்ண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்ற பெயரில் ஜனாதிபதி தனது பதவிக் காலத்தை நீடிக்கச் செய் வதை நோக்கமாக கொண்டுள்ளார்.

இதனை நாம் அனுமதிக்கமாட்டோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் நாமும் இருக் கின்றோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 02, மீசாலை அல்லாரை வீதி, 31 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கந்தையா கெங்காதரம் என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை மீசாலை கிழக்கு, மீசாலை, கந்தையா கெங்காதரம் பிரசித்த நொத்தாரிசு சிவசுப்பிரமணியம் முகதாவில் 15.10.2018 ஆம் திகதியிடப்பட்ட 3007 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பெயரிற்கு உறுதி நிறைவேற்றியுள்ளார். இவ்வாதனம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவு சாவகச்சேரி நகரசபைக்குட்பட்டது. வட்டாரம் 02, ஆதனவரி இல 31. சாவகச்சேரி கோயிற்பற்று ஜே/318 மீசாலை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்டது. மீசாலை இறை "குழைக்காடு" நி.பர 03 குளி 14.22. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் க.கனகசபை அவர்களால் 03.10.2018 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 7360 ஆம் இலக்க வரைபடத்தின்படி அளந்து கண்ட நிலப்பரப்பு 03 குளி 14.22.
இதற்கு எல்லை,

கிழக்கு - மதன் பெண் தர்சிகாவிற்குரிய ஆதனம்.
வடக்கு - சுமத்தின் பெண் நந்தினிக்குரிய ஆதனம்.
மேற்கு - சின்சிவன் லிந்துயாவுக்குரிய ஆதனம்.
தெற்கு - றோட்டு.

இவ் ஆதனம் 1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தன்னால் கொள்வனவு செய்யப்பட்டது என்றும் தனது பெயரிற்கு நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிப்படி தனது கொள்வனவும் ஆட்சியும் உடைய ஆதனம் என்றும், கொள்வனவு செய்யப்பட்ட உறுதி கடந்த கால இடப்பெயர்வின்போது கைதவறியுள்ளது என்றும் யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் உறுதி கிடைக்கவில்லை என்றும் இவ் ஆதனத்தை இதுவரை தானே ஆட்சி செய்து வருகின்றேன் என்றும் குறித்த ஆதனத்தின் உரித்தாளரும் சொந்தக்காரனும் ஆட்சியாளனும் தானே என்றும் குறித்த கந்தையா கெங்காதரம் வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் மீசாலை கிழக்கு மீசாலை கந்தையா கெங்காதரம், பிரசித்த நொத்தாரிசு சிவசுப்பிரமணியம் முகதாவில் 21.11.2018 ஆம் திகதியிடப்பட்ட 3148 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அவரது மகள் அவ்வூர் பொன்னம்பலம் ஈசன் பெண் ஞானசவுந்தரி இற்கு நன்கொடை கொடுத்துள்ளார்.

தற்போது பொன்னம்பலம் ஈசன் பெண் ஞானசவுந்தரி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ, தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(8295)


# இன்று ஒரு தகவல் 36



தென்கச்சி கோசுவாமிநாதன்

## குரு-சீடன்

ஒரு பெரிய பண்டிதர் இருந்தார்!

வேதங்கள் எல்லாம் படித்து கரை கண்டவர். ஒரு புண்ணிய காலத்திலே கடலிலே நீராடுவதற்கு போனார். அவர் கையிலே ஒரு தீர்த்தப் பாத்திரம் வைத்திருந்தார். அதை கரையிலே எந்த இடத்திலே வைத்து விட்டு போவது என்று யோசித்தார்.

மண்ணிலே ஒரு குழி தோண்டினார். அந்த பாத்திரத்தை பத்திரமாக வைத்து புதைத்தார். அந்த இடம் ஞாபகம் இருக்கணும் என்பதற்காக அந்த இடத்தில் மணலை முட்டாக சேர்த்து குவித்து வைத்தார். அவர் திரும்பி வந்து பார்க்கும் பொழுது புதைத்த இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை! ஏன் தெரியுமா?

அந்த கடற்கரை முழுவதும் ஆயிரக்கணக்காண மணல் முட்டுக்கள். எந்த முட்டு என்று தேடுவது? இவர் மணலை மேடாக குவித்து வைத்திருந்ததை ஒருவர் பார்த்தார்! அவ்வளவு தான். சரி அதிலே ஏதோ அர்த்தம் இருக்கு என்று முடிவு செய்து விட்டார்.

ஒரு பெரிய பண்டிதரே இப்படி செய்தார் என்றால் அதில் ஒரு அர்த்தம் இருக்கும் என்று நினைத்துவிட்டார். உடனே அவரும் ஒரு மணலிலே ஒரு முட்டு கட்டி வைத்து விட்டு குளிக்க போனார். இதைப்பார்த்து இன்னொருத்தர்! அதைப்பார்த்து இன்னொருத்தர்! கடைசியிலே கடற்கரை முழுவதும் மணல் முட்டுக்கள்! மக்கள் எல்லோரும் சேர்ந்து பண்டிதரையே குழம்ப வைத்து விட்டார்கள் பாத்திரத்தை புதைத்த இடம் தெரியாத அளவுக்கு. இதைப்பற்றி பண்டிதர் ஒரு சுலோபமே பாடியிருக்கிறார்.

**"கதானு கதிகோ லோகே நலோக பரமார்த்திகா**
**கேதௌ ஸைகத லிங்கேந நஷ்டமே தாம்ப்ர பாஜனம்"**

இந்த உலகத்திலே மக்களிடம் ஆராய்ச்சி குறைந்து கொண்டு போகிறது. இதை ஏன் செய்ய வேண்டும் என்கின்ற சிந்தனை இல்லை! நான் பாத்திரத்தை புதைத்த இடத்திற்கு அடையாளமாக மணலை லிங்கம் மாதிரி குவித்தேன். இப்போது பார்த்தால் ஆயிரமாயிரம் லிங்கங்கள். என் பாத்திரத்தை எப்படி தோண்டி எடுப்பேன்? தாமிர பாத்திரம் நஷ்டமாகி விட்டதே என்று பாடினார். பெரியவர்கள் போகும் வழியில் ஏன்? எதுக்கு? என்று கேட்காமல் போவது நல்லது தான் அதற்காக இப்படியா.

இன்னொரு சீடன் இருந்தார். அவர் எப்படி தெரியுமா? எதுவாக இருந்தாலும் ஏன் எப்படி என்று கேள்வி கேட்காமல் இருக்க மாட்டார். எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுவது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். தன்னுடைய குருவையே சந்தேகக்கண்ணோடு பார்க்கிறவன். அந்த துறவியும் சீடனும் ஒரு காட்டு வழியில் போய்க்கொண்டு இருந்தார்கள். வழியிலே ஒரு இடம் சேறும் சகதியுமாக இருந்தது. அந்த இடத்தை தாண்டி இவர்கள் போகணும். அங்கே ஒரு சிறு பெண்பிள்ளை ஓரமாக நின்று கொண்டு இருந்தாள். தயங்கிக் கொண்டே ஏனம்மா இங்கே நிற்கிறாய் என்று கேட்டார் துறவி.

அந்த பக்கம் போக வேண்டும் எப்படி போவது என்று யோசித்து கொண்டு இருந்தேன் என்றாள் அவள். அதற்கு அந்த துறவி கவலைப்படாதே அதற்கு நான் உதவி செய்கிறேன் என்றார். அந்த சிறுமியை தன்னுடைய தோளிலே சுமந்து கொண்டு கரையிலே விட்டார்.

சீடனுக்கு அதிர்ச்சி ! ஒரு துறவி இளம் பெண்ணை தொட்டு தூக்குவது சரிதானா? அவனுக்கு குழப்பம் இருந்தாலும் உடனடியாக கேட்க வில்லை. அதிக நேரம் கடந்து ஒரு இடத்திற்கு வந்தார்கள். சீடன் முகம் ஒரு மாதிரியாக இருந்தது. என்ன யோசிக்கிறாய் என்று துறவி சீடனை பார்த்து கேட்டார்? சுவாமி ஒரு இளம்பெண்ணை தொட்டு தூக்கி தோளில் சுமந்து கொண்டு நடக்கிறது சரி தானா என்று கேட்டான். அதற்கு அந்த துறவி அமைதியாக பதில் சொன்னார் .

நான் அப்பவே அந்த பெண்ணை தோளில் இருந்து இறக்கி விட்டு விட்டேனே? நீ இன்னுமா சுமந்து கொண்டு இருக்கிறாய் என்று கேட்டார். இந்த இரண்டு நிகழ்வுகள் மூலமாக நான் சொல்ல வந்தது இது தான். இந்த உலகத்திலே கண்ணை முழுவதுமாக மூடிக்கொண்டு ஒருவர் பின்னால் போவதும் தப்பு. கண்ணை முழுவதுமாகத் திறந்து கொண்டு ஒருவர் பின்னால் போவதும் தப்பு.!

குருபக்தி என்பது சாதாரண விடயம் இல்லை. பெரிய விடயம் தான் ஆனாலும் குரு குருவாக இருக்க வேண்டும். சீடன் சீடனாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம். அப்படி இல்லை என்றால் விடயம் வேறு மாதிரி ஆகிவிடும்.

ஒரு சீடன் இருந்தான் . அவன் கையில் ஒரு ஒட்டடைக் குச்சியை வைத்து இருந்தான். வானத்தை நோக்கி இடிக்கிற மாதிரி குத்திக்கொண்டு இருந்தார். குரு இதைப்பார்த்தார். என்னப்பா செய்கிறாய் என்று கேட்டார். அந்த நட்சத்திரத்தை எல்லாம் இந்த குச்சியாலே குத்தி கீழே தள்ளப்போறேன் என்றான் சீடன். குருவுக்கு கோபம் வந்து விட்டது. சரியான முட்டாளாக இருக்கிறியே. உன்னை எனது சீடன் என்று சொல்லிக்கொள்வதற்கே வெட்கமாக இருக்கிறது என்றார்.

சீடன் கையை கட்டிக்கொண்டு பௌவ்யமாக நின்றான். குரு வழி சொல்லிக் கொடுத்தார். இங்கே நின்று கொண்டு இந்த குச்சியை நீட்டினால் நட்சத்திரம் எப்படி எட்டும். முட்டாளே போய் அந்த கூரை மேலே ஏறி நின்று இடு அப்பத்தான் நட்சத்திரம் முட்டும் என்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும மேன்முறையீடுகள் வடக்கிலே முதலில் நிறைவு செய்யப்பட்டுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் மேன்முறையீடுகள் தொடர்பான விசாரணைகள் வடக்கு மாகாணத்திலேயே முதலில் நிறைவு செய்யப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் நேற்று கொழும்பில் அமைந்துள்ள நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அஸ்வெசும நலன்புரி திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னேடுக்கப்பட்டுள்ளதுடன், பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்திற்கு மாகாண சபைகளின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளும் நோக்குடனே குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கையின் போது 1.1 மில்லியன் மேன்முறையீடுகள் நாடளாவிய ரீதியில் கிடைக்கப்பெற்றன.

அவற்றில் வடக்கு மாகாணமே முதலாவதாக மேன்முறையீட்டு விசாரணைகளை நிறைவு செய்து பயனாளிகளின் தரவுகளை இற்றைப்படுத்தியதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதன் போது குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கருத்த தெரிவிக்கையில், வடக்கில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தரவுகள் தயார் நிலையில் உள்ளதாகவும், இதனூடாக புதிய பயனாளர்களை தெரிவு செய்வது இலகுவாக அமையும்.

மேலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிலையான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.(நி-6)

# தீப்பற்றி எரிந்த கார்

(கொழும்பு)

வாதுவை, பொத்துப்பிட்டிய காலி வீதி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று தீப்பிடித்து முற்றாக எரிந்துள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

காரில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. (நி-6)

# தேராவில் பகுதியில் மணல், மரக்கடத்தல் அதிகரிப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு தேராவில் நஞ்சுண்டான் குளம் சூழலில் பெருமளவில் மணல் அகழ்வு நடைபெறுவதுடன் மரங்களும் கூடுதலாக வெட்டி எடுத்துச் செல்லப்படுவதாக இக்கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

தேராவில் கிராமத்தில் இருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் நஞ்சுண்டான் குளம் உள்ளது.

நஞ்சுண்டான் குள சூழலில் அகழப்படும் மணலும் வெட்டப்படும் மரங்களும் ஏ-35 பரந்தன் முல்லைத்தீவு வழியாகவே வெளி இடங்களுக்கு தொடர்ந்து கொண்டு செல்லப்படுகிறது.

இதனை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-350)

# முக்கொம்பன் போக்குவரத்து சேவைகளை விஸ்தரிப்பு செய்யுங்கள்

## மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முக்கொம்பன் பிரதேசத்துக்கான சீரான போக்குவரத்து வசதியின்மை யால் அப் பகுதி மக்கள் பெரும் சிரமங் களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் அரசபுரம் செக்காலை போன்ற கிராமங்களுக்கான போக்கு வரத்து சேவைகள் சீராக இடம்பெறாமையினால் அப் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதே நேரம் இந்தப் பிரதேசங்களை அண்மித்துக் காணப்படுகின்ற கண்ணகைபுரம் கிராமத்தில் உள்ள மக்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் குறிப்பாக இலங்கை போக்குவரத்து சபை பேருந் துகள் தவிர வேறு எந்த சேவைகளும் இடம் பெறுவதில்லை என்பதுடன் ஒரே ஒரு போக்குவரத்து சேவை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சேவைகளை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பில் புதை யல் தோண்டிய சந்தேகத் தில் அறுவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகா ரிக்கு கிடைத்த தகவலின் படி, இரணைப்பாலை பிரதேசத்தில் யுத்தத்தின் போது புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தங்கம் மற்றும் சொத்துக்களை தேடும் நோக்கில் அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த 6 நபர்களையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த இடத்தில் தண்ணீர் எடுப்பதற்காக கட்டப் பட்ட கிணற்றின் அருகில் 3 அடி நீளமும் 6 அடி ஆழமும் கொண்ட குழி தோண் டிக்கொண்டிருந்த சந்தேக நபர்களும் அவர்களது சொத் துக்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களையும் சான்றுப்பொருட்களையும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு மேலதிக விசாரணை[illegible] முன்னெடுத்து[illegible] (நி-6-[illegible])

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 1000 | 900 | 800 |
| தக்காளி | 900 | 700 | 700 | 610 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 165 | 160 |
| கோவா | 600 | 450 | 450 | 600 | 600 |
| கரட் | 800 | 250 | 1000 | 900 | 900 |
| பூசணி | 280 | 280 | 250 | 210 | 300 |
| புடோல் | 200 | 200 | 240 | 200 | 350 |
| வாழைக்காய் | 250 | 280 | 240 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 250-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 320 | 380 | 350 | 350-420 | 400 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 500 | 450 | 250 | 390 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 | 500 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 550 | 400 |
| பீற்றூட் | 450 | 300 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 80 | 700 | 600 | 1200 |
| முருங்கைக்காய் | 1800 | 1200 | 1500 | 1200 | 1200 |
| போஞ்சி | 400 | 400 | 500 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 400 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 50-90 | 100 |
| தேசிக்காய் | 150 | 250 | 250 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 100 | 50-110 | 70-110 |
| இராசவள்ளி | 320 | 400 | 400 | 390 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 300 | 200 | 300 |
| முள்ளங்கி | 100 | 150 | 250 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 140 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 50 | 70 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 405





அப்படி ஒரு அதிசயமான முக ஒற்றுமை இருப்பதாக எனக்குக் கூடச் சில சமயம் தோன்றியதுண்டு வாருங்கள்! நடந்து கொண்டே பேசலாம்!" என்றார் இளவரசர்.

வீதி ஓரமாக வீடுகளின் நிழலில் நடப்பதற்குப் பதிலாக இப்போது மூவரும் நடுவீதியில் நிலா வெளிச்சத்தில் நடக்கத் தொடங்கினார்கள்.

சற்று நடந்ததும், "இளவரசே! தங்களைக் கையைத் தட்டி அழைத்து அந்த அம்மாள் என்ன சொன்னாள்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"என்னைத் தேடிக்கொண்டு இரண்டு சத்துருக்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் என்னைக் கொல்வதற்குச் சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகவும் சொன்னாள்."

"அடிப்பாவி! ஒரு வேளை எங்களைப் பற்றித்தான் அப்படிச் சொன்னாளா என்ன?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

பொன்னியின் செல்வர் சிரித்துவிட்டு, "இல்லை, நீங்கள்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அப்படி நீங்களாகவே இருந்தாலும் கவலையில்லை. என் உயிர் மிகக் கெட்டியானது என்று அந்தத் தேவி சொல்லியிருக்கிறாள்! முன்னம் பல தடவை என்னைக் காப்பாற்றியும் இருக்கிறாள்!" என்றார்.

"ஐயா! அந்த இரண்டு பகைவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பார்த்திபேந்திர பல்லவருடன் தங்களைக் தேடி வந்தவர்கள். இடிந்து விழுந்த மாளிகையில் இரண்டு உருவங்கள் தெரிந்தன. அவர்களாகத்தான் இருக்க வேண்டும்!" என்றான் திருமலை.

"ஐயா! வைஷ்ணவரே! இதை முன்னமேயே ஏன் சொல்லவில்லை! நீங்கள் மேலே செல்லுங்கள். நான் போய் அந்த இடிந்த வீட்டைச் சோதனை போட்டுவிட்டு வருகிறேன்!" என்று வந்தியத்தேவன் திரும்ப யத்தனித்தான்.

இளவரசர் அவனை மறுபடியும் கையைப் பிடித்து நிறுத்தி, "அவசரம் ஒன்றுமில்லை. அந்தப் பாழடைந்த வீட்டில் அவர்களைக் கண்டுபிடிக்கவும் முடியாது. பிறகு பார்த்துக் கொள்ளலாம். நான் மறு உத்தரவு போடும் வரையில் நீர் என்னுடனேயே இருக்க வேண்டும், தெரிகிறதா? இந்தப் பாழடைந்த நகரத்தில் இன்னும் எந்த மூலை முடுக்குகளில் என்ன அபாயம் காத்திருக்கிறதோ, யார் கண்டது? வீர சிகாமணியே! உம்மை நம்பியல்லவா நான் வேறு யாரையும் மெய்க்காவலுக்கு அழைத்து வரவில்லை? இப்படி நடுவீதியில் என்னைக் கைவிட்டுப் போய்விட்டால் நான் என்ன செய்வேன்?" என்றார்.

இந்த வார்த்தைகள் வந்தியத்தேவனைப் போதை கொள்ளச் செய்தன. அவன் நாத்தழுதழுக்க, "ஐயா! உங்களை விட்டு இனி நான் ஒரு கணமும் அகலமாட்டேன்!" என்றான்.

ஆழ்வார்க்கடியான், "உன்னை விட்டு நானும் அகலமாட்டேன். இளவரசருக்கு நீ காப்பு உனக்கு நான் காப்பு" என்று சொன்னான்.

சிறிது நேரத்துக்கெல்லாம், மகாஸேன சக்கரவர்த்தியின் பாழடைந்த மாளிகையின் உட்புறத்தை மூவரும் அடைந்தார்கள். விசாலமான ஓர் அறையில் மூன்று பேருக்கும் பழைய காலத்துக் கட்டில்களில் படுக்கை விரித்திருந்தது. மூவரும் படுத்துக் கொண்டார்கள். அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த பலகணியின் துவாரங்கள் வழியாக நிலா வெளிச்சம் உள்ளே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

"பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரண்மனையில் இதே இடத்தில் இலங்கையின் சக்கரவர்த்திகளும், இளவரசர்களும் அவர்களுடைய அந்தப்புர மாதரசிகளும் படுத்திருப்பார்கள். அப்போதும் இதே மாதிரி நிலாவின் கிரணங்கள் இந்தப் பலகணியின் வழியாக எட்டிப் பார்த்திருக்கும். இப்போது அதே இடத்தில் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பார்த்துவிட்டு இந்த நிலாக் கிரணங்கள் ஏமாற்றமடையும், இல்லையா, வந்தியத்தேவரே!" என்றார் அருள்மொழிவர்மர்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நடனமாடிய ஆட்டுக்குட்டியும் ஓநாயும்

ஒரு காட்டுக்கு பக்கத்துல இருக்குற கிராமத்துல ஒரு ஆட்டுக்குட்டி இருந்துச்சு.

அது எப்பவும் தன்னோட அம்மவோடவும் தங்களோட ஆட்டு மந்தையோடயும் சேர்ந்து அந்த காட்டுக்குள்ள போயி இரைதேடி சாப்பிடும்.



சாயந்திரம் ஆனதும் தன்னோட மந்தையோட சேர்ந்து வீட்டுக்கு வந்திடும் அந்த ஆட்டுக்குட்டி.

ஒருநாள் அதே மாதிரி காட்டுக்குள்ள இரைதேட போன அந்த ஆட்டுக்குட்டி ரொம்ப பசிச்சதால தனக்கு வேண்டிய இலை தழைகளை சாப்பிட்டுக்கிட்டு இருந்துச்சு.

அப்படி சுவாரசியமா சாப்பிட்டுகிட்டு இருந்த ஆட்டுக்குட்டி தன்னோட அம்மாவயும் தன்னோட ஆட்டு கூட்டத்

மறந்துடுச்சு.

சாயந்திரம் ஆனதால அந்த ஆட்டு கூட்டம் தங்களோட கிராமத்த நோக்கி நடக்க ஆரம்பிச்சுட்டாங்க.

ஆனா இது தெரியாத ஆட்டு குட்டி தன்

சாப்பிட்டுக்கிட்டே இருந்துச்சு.

அப்ப அங்க ஒரு ஓநாய் வந்துச்சு அத பார்த்த ஆட்டுக்குட்டி ரொம்ப பயந்து போச்சு.

கொஞ்சம் தைரியமா இருந்த ஆட்டுக்குட்டிக்கு ஒரு யோசனை வந்துச்சு.

உடனே அந்த ஓநாய் கிட்ட ஐயா நீங்க எப்படியும் என்ன சாப்பிட போறீங்க அதனால என்னோட கடைசி ஆசைய நிறைவேத்துங்கனு சொல்லுச்சு.

அந்த ஓநாயும் உன்னோட கடைசி ஆசை என்னனு கேட்டுச்சு,

அதுக்கு அந்த ஆட்டுக்குட்டி சொல்லுச்சு எனக்கு டான்ஸ் ஆடணும்போல இருக்கு நீங்க ஒரு பாட்டு பாடுங்கனு சொல்லுச்சு.

உடனே அந்த ஓநாய் பாட்டு பாட ஆரம்பிச்சுச்சு, அப்பத்தான் அந்த சத்தம் கேட்ட ஆட்டு கூட்டத்தை சார்ந்த வேட்டை நாய்களுக்கு அந்த சத்தம் கேட்டுச்சு.

உடனே அந்த வேட்டை நாய்கள் எல்லாம் ஓநாய் சத்தம் வர்ற இடத்துக்கு ஓடி வந்துச்சுங்க.

வேட்டை நாய்கள் பார்ததும் ஓநாய் அங்க இருந்து ஓடி போய்டுச்சு. அங்க வந்த அந்த ஆட்டு குட்டியோட அம்மா நடந்த எல்லாம் கேட்டு தெரிஞ்சிக்கிட்டு, ஆட்டு குட்டியோட புத்திசாலித்தனத்தை பாராட்டிடுச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறே செய்ததில்லை என்பவர் புதியதாய் எதையும் முயற்சி செய்திராதவர்.

– ஆல்பட் ஐன்ஸ்டைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்னிலங்கை அரசியலை உன்னிப்பாக அவதானியுங்கள்

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது உறுதியாகிவிட்டது. பெரும்பான்மையின அரசியல் கட்சிகள் தேர்தல் களத்துக்குத் தங்களைத் தயார்ப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார்? என்ற கேள்வியோடு சூடிய வாதப் பிரதிவாதங்கள் தென்பகுதி மக்களை ஆட்கொண்டுள்ளன.

இதேவேளை இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவது கண்கூடு.

ஆம், ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவை டில்லிக்கு அழைத்து இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியாவின் இந்த நடவடிக்கையை யாரேனும் சாதாரண விடயமாகப் பார்ப்பார்களாயின், அதைவிட்ட அறிவுப் பஞ்சம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

தவிர, அநுரகுமார திஸாநாயக்கவை இந்திய அழைத்து அவருடன் கலந்துரையாடிய விடயம் தென்பகுதி அரசியலில் பேசுபடு பொருளாகியுள்ளது.

தவிர, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் இந்தியா அழைக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மைத்திரிபால சிறிசேனவை அழைப்பதனூடாக இந்தியா சாதிக்க நினைப்பது என்ன? என்ற கேள்வி எழலாம்.

ஆனால் இங்குதான் இந்தியாவின் இரட்டை இராஜதந்திர நுட்பம் உணரப்பட வேண்டும்.

அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருப்பவர் மைத்திரிபால சிறிசேன. இலங்கையின் அரசியல் புலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு காத்திரமான மக்கள் பலம் உண்டு.

எனவே மைத்திரிபால சிறிசேனவை அழைப்பதனூடாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வகிபாகம் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைப்பது இந்தியாவின் நோக்கம்.

இதற்கும் மேலாக, அநுரகுமார திஸாநாயக்கவை மட்டும் அழைத்துக் கலந்துரையாடுவது, அநுரவுக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தலாம்.

எனவே எல்லா வீடுகளின் கதவுகளையும் தட்டிய பொற்கைப்பாண்டியன் போல, இந்தியாவும் மைத்திரிபால சிறிசேனவை அழைத்து அதனூடாக, அநுரகுமாரவுக்கு பிராயச்சித்த அபிசேகம் செய்யவுள்ளது.

ஆக, மைத்திரிபால சிறிசேனவை அழைத்து மேற்போந்த இரண்டு நோக்கங்களை நிறைவேற்றவுள்ள இந்தியா; முதலாவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கே அழைப்பு விடுத்திருந்தது.

பொதுவில் சஜித் தீர்மானம் எடுப்பதில் மிகவும் பலவீனமானவர் என்பதால், அவருக்கு முதலாவது அழைப்பை விடுத்தால் அவர் நிச்சயம் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இங்குதான் சஜித்தைச் சந்திக்காமலும் இருக்க வேண்டும். அதேவேளை அழைப்பு விடுத்ததாகவும் இருக்க வேண்டும் என்ற நியமத்தை இந்தியா கனகச்சிதமாக நிறைவேற்றியுள்ளது.

எதுவ்வாறாயினும் இந்தியாவின் அழைப்பை ஏற்றுச் சென்ற அநுரகுமார திஸாநாயக்கவின் இராஜதந்திர மறுசீரமைப்பை எங்கள் தமிழ்த் தரப்புகள் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

# நாட்டில் நிறைவேற்று அதிகாரம் அவசியமான ஒன்றாகும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நாட்டில் நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று நம்புவதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றுக்கிடையில் சம தன்மை கொண்ட அதிகாரம் பேணப்பட வேண்டும் என்ற கருத்தும் தனக்கு ஆழமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

காலத்துக்கு காலம் அரசியல் காரணங்களுக்காக விவாதிக்கப்படும் விடயங்களுள் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி விடயமும் ஒன்று.

இதேநேரம் தமிழரது தரப்பை எடுத்துக்கொண்டால் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்ட வேளையில் அதை வரவேற்றார்கள். அதன் பின்னர் அது தேவை இல்லை என இன்னொரு தரப்பு கூறியபோதும் அதையும் வரவேற்றுள்ள நிலைமைதான் இருக்கின்றது..

ஆனால் இன்று நாடு இருக்கின்ற ஒரு சூழலில் நிறைவேற்று அதிகாரத்திற்குரிய அவசியம் இருப்பதாகவே தெரிகின்றது. காரணம் நிறைவேற்று அதிகாரத்துக்கு ஊடாகத்தான் நாம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என நான் நம்பகின்றேன்.

இதேநேரம் நிறைவேற்று அதிகாரம் என்பது உலகின் வேறு பல நாடுகளிலும் இருக்கின்ற ஒரு விடயம்தான். இருந்தபோதும் பாராளுமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் சம தன்மை பேணப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தையே நான் கொண்டுள்ளேன்.

மேலும் நாடு தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன். அது மட்டுமல்லாது இதை நான் பல தடவைகள் பொது வெளியிலும் கூறிவந்திருகின்றேன்.

அதேநேரம் தென்னிலங்கையில் நாட்டை சீர்தூக்கிச் செல்லக்கூடிய வகையில் வேறு தலைவர்கள் இருப்பதாகவும் எனக்கு தெரியவில்லை. அதாவது செயலற்றுக் கிடந்திருந்த நாட்டை மிகக் குறுகிய காலத்துக்குள் முடியுமானவரை சீர் செய்து ஓடச் செய்துள்ளார் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவர் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பாரானால் நாடு முழுமையாக வளர்சிபெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார். (ம-7,60,350)

## மின்சாரம் தாக்கியதில் மட்டக்களப்பில் இருவர் பலி

மட்டக்களப்பு - கிரானில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

21 மற்றும் 51 வயதான குறித்த இருவரும் யானை வேலியில் பாய்ந்த மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை 6.30 மணியளவில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள செய்கையை பாதுகாப்பதற்காக சென்ற இருவரே அனர்த்தத்தில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## சோதனையின் போது தாக்குதல் நால்வர் வைத்தியசாலையில்

பாணந்துறை பகுதியில் உந்துருளியொன்றை சோதனையிட முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நால்வர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறை வலய போக்குவரத்து பிரிவு உத்தியோகத்தர்கள் இருவரும் உந்துருளியில் பிரவேசித்த இருவருமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், நேற்று அதிகாலை பாணந்துறை, வலான பாலத்திற்கு அருகில் வாகன சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன்போது, மொரட்டுவையில் இருந்து பாணந்துறை நோக்கி மூன்று பேருடன் பயணித்த உந்துருளியொன்றை சோதனையிட்டபோது, உந்துருளியில் பிரவேசித்த இருவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே உந்துருளியில் பிரவேசித்த ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், தெரிவித்துள்ளனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை **காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில்** மாங்குளம் சந்தி, மாங்குளம் பாடசாலையடி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஐவர் சுட்டுக்கொலை
## 14 சந்தேகநபர்களதும் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

தெற்கு அதிகவேக வீதியின் பெலியத்த நுழைவாயில் பகுதியில் துப்பாக்கிச் சூட்டை நடத்தி 5 பேரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 14 சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் எதிர்வரும் பெப்ரவரி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 22ஆம் திகதி தெற்கு அதிகவேக வீதியின் பெலியத்த நுழைவாயில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமது மக்கள் சக்தியின் தலைவர் உள்ளிட்ட ஐவர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அலிசப்ரி ரஹீம் எம்.பி பயணித்த கார் விபத்து
### ஒருவர் படுகாயம்

(கொழும்பு0

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த கார் நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 15 ஆம் அஞ்சல் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக சாலியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

அளுத்கம, மேல் புளியங்குளிம பகுதியைச் சேர்ந்த ஒருவரே விபத்தில் காயமடைந்து புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் புத்தளத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கி காரில் பயணித்துக் கொண்டிருந்த போது விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த கார், கார் சென்ற திசையில் சென்ற உழவு இயந்திரத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உழவு இயந்திரத்தின் சாரதி காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் காரின் சாரதி சாலியவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



01

### சர்வதேச தாய் மொழிகள் தினம்

1947 இந்திய பிரிவினையை அடுத்து, பாகிஸ்தான் உருவானபோது, அதன் இரண்டு பகுதிகளான கிழக்குப் பாகிஸ்தானுக்கும் (கிழக்கு வங்காளம்) மேற்குப் பாகிஸ்தானுக்கும் இடையே பண்பாட்டு, புவியியல், மொழியியல் அடிப்படைகளில் பெரிய வேறுபாடுகள் இருந்தன. 1948 இல் பாகிஸ்தான் அரசு உருது மொழியை பாகிஸ்தானின் ஒரே நாட்டு மொழியாக அறிவித்தது. இந்த அறிவிப்பு வங்காளமொழி பேசும் கிழக்குப் பாகிஸ்தானைக் கொந்தளிக்கச் செய்தது.

இதையடுத்து கிழக்கு பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று “வங்க மொழி இயக்கம்“ உருவானது. டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பிற அரசியல் ஆர்வலர்கள் சட்டத்தை மீறி 21 பெப்ரவரி 1952 அன்று ஒரு போராட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

இப் போராட்டத்தின்போது காவல்துறையினர் ஆர்ப்பாட்டக்கார மாணவர்களைக் கொன்றனர். இதனால் மொழி இயக்கம் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த மரணங்கள் பரவலான உள்நாட்டுக் கலவரத்தைத் தூண்டின. இவ்வாறு நடந்த பலவருட மோதல்களுக்குப் பிறகு, பாகிஸ்தான் மத்திய அரசினால் 1956 ஆம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தான் மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டு தோறும் பெப்ரவரி 21 ஆம் திகதியை உலக தாய்மொழிகள் தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் 1998 ஆம் ஆண்டு யுனெஸ்கோவில் முன்மொழிந்தார்.

தாய் மொழிக்காக போராடி உயிரிழந்தவர்கள், அதற்கான இயக்கத்தை நினைவுகூறி, அனைத்து மக்களின் தாய்மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில் பெப்ரவரி 21ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக யுனெஸ்கோ 1999 ஆம் ஆண்டு அறிவித்தது. இதையடுத்து 2000 ஆம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ஆம் திகதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

பொதுவாக கூறுவதானால் உலகில் உள்ள அனைத்து மக்களின் மொழி உரிமையைப் பாதுகாக்கவே 1999ஆம் ஆண்டில் 21 பெப்ரவரியை சர்வதேச தாய் மொழி நாள் என ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ அறிவித்தது. உலகம் தழுவிய முறையில் எடுக்கப்படும் உன்னதமான நடவடிக்கையாக இச்செயல் விளங்குகிறது.

### நீங்கள் குழந்தையாக இருக்கும் போது கற்றுக்கொள்ளும் முதல் மொழியே தாய் மொழியாகும்

ஒருவரின் தாய்மொழி தனது பெற்றோரின் மொழியா அல்லது தனது தாயின் மொழியா என்பதில் சிக்கல் உள்ளது. எமது தாய் மொழி தமிழ். எமது புலம் பெயர் வாழ்வில் பிறந்த பிள்ளைகளுக்கும் தமிழ்தான் தாய்மொழியா புலம்பெயர் வாழ்வில் தாய்மொழி எது என்பதை வரையறுப்பதில் சிக்கல்கள் உள்ளன.

ஒருவரின் தாய்மொழி என்பது அவரின் பெற்றோரின் தாய்மொழியாக எப்போது அமையுமெனின் அவரின் பெற்றோரின் தாய்நாட்டில் அவர் வாழும்போதும் அல்லது அவரின் தாய் நாட்டு மொழி மற்றொரு நாட்டுமொழியாக இருக்கும் போதுமேயாகும்.

எனவேதான் யுனெஸ்கோ தாய் மொழி என்றால் என்ன என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றது. வீட்டுச் சூழலில் குழந்தைப் பருவத்தில் கற்றமொழி, முதல் மொழி அல்லது தாய் மொழி என்றும் குறிப்பிடப்படுகிறது. அதாவது பள்ளியிலோ அல்லது பெரியவர்களாக கற்கும் மொழியைக் காட்டிலும் குழந்தையாக இருக்கும் போது நீங்கள் கற்றுக் கொள்ளும் முதல்மொழியே தாய் மொழியாகும்.

பெற்றோர்களுடைய தாய் மொழியும் பிள்ளைகளின் தாய்மொழியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழியும் ஒருவனுக்குத் தாய்மொழியாக அல்லது தாய் மொழிகளாக இருக்கலாம்.

உலகளவில் மனித சமுதாயம் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ளமுடிகிறது என்றால் அதற்கு காரணம் மொழி. உலகில் பேச்சு வழக்கதில் ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. இதுமாவட்டம், மாகாணம். நாடு, கண்டம் என வேறுபடுகிறது. ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் ஒரு தாய்மொழி இருக்கும். இவற்றின் தனித்தன்மை பண்பாட்டை பாதுகாக்கும் நோக்கிலும் அவற்றுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கிலும் பெப்ரவரி 21 ஆம் திகதி சர்வதேச தாய் மொழி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

தாய்மொழி, தேசிய மொழி மற்றும் தொடர்பு மொழி என பொதுவாக மூன்று விதமான மொழிகள் ஒருவருக்கு தெரிந்திருந்தால் எங்கு வேண்டுமானாலும் வாழ்வதற்கு துணையாக இருக்கும் என அறிஞர்கள் கூறுவர்.

### தாய்மொழி என்பதற்கு சரியான வரைவிலக்கணம் கொடுப்பது எளிதானதல்ல

தாய்மொழி என்பதற்குப் பல விதமான வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. மிகப் பரவலாகப் புழங்கிவரும் இச் சொல் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு சொல்லாகத் தோன்றினாலும், இதற்குச் சரியான வரைவிலக்கணம் கொடுப்பது எளிதானதல்ல.

ஒரு வரைவிலக்கணப்படி சிறுவயதில் கற்கப்பட்டு ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்குக் கடத்தப்படும் மொழியே தாய் மொழி எனப்படுகிறது. வேறு சில சிறுவயதில் முதன் முதலாகக் கற்கும் மொழியே தாய் மொழி என்கின்றன. இன்றைய நிலையில் பல நாடுகளும் சமுதாயங்களும் நிறுவனங்களும் தங்களது வசதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்பத் தாய் மொழி என்பதற்கு விளக்கம் கொடுக்கின்றன.

பிறந்த குழந்தை அது வளரும் சமூகச் சூழலில் இயல்பாக பேசிப் பழகி கற்றுக் கொள்வதும் அன்றாட வாழ்க்கையில் தொடர்பாடலுக்கு மட்டுமல்லாமல் உணர்ச்சிகளை உணர்வுகளை அனிச்சையாக வெளியிட உதவுவதுமான மொழியே தாய்மொழி எனலாம். (இச்சை செயல்என்றால், விரும்பி செய்வது அனிச்சைசெயல்என்றால், நம்மை அறியாமல் தாமாகஇயங்குவது. உதாரணமாக ஒருவரின் தாய்மொழி எதுவெனக் காண்பதற்கு அவரின் காலை மற்றவர் மிதிப்பதை சினிமாப் படங்களில் கண்டிருப்பீர்கள்)

முற்கால சூழலில் தாயின் மொழியும் பிள்ளையின் மொழியும் ஒன்றாக இருந்திருக்கலாம். ஆனால் தற்கால சூழலுக்கு மேலே உள்ள வரையறைதான் சரியாக இருக்கும்.

சிந்திக்க ஆரம்பித்துவிடும் போது நம் மூளை வளர்ந்து விடுகின்றது. அறிவும் விரிந்து விடுகின்றது. பல கோணங்களில் சிந்திக்க ஆரம்பித்து விடுகிறோம். வாழ்வின் பிற்பகுதியில் பலர்வேறுபட்ட மொழிகளையும் கற்று விடுகிறார்கள்.

பிறக்கும் போது எமக்கு எந்த ஞானமும் இல்லை. அம்மாவின் பாலோடு எமக்குப் புகட்டப்படுவது அம்மாவின் மொழிதான். ஆடு, பூனை என்றெல்லாம் மிருகங்களை விளிக்கவும் அக்கா, அண்ணா, மாமா என்றெல்லாம் உறவுகளை அழைக்கவும் நமக்குச் சொல்லித் தருவது எமது தாய் தான். அந்தத் தாய் தன் பிறப்பிலிருந்து கற்ற மொழியைத்தான் தன் பிள்ளைக்குச் சொல்லித்தருகிறாள். எனவே தாய் கற்ற மொழியையே பிள்ளை கற்கிறது. அதுவே அந்தப் பிள்ளைக்கும் தாய் மொழியாகின்றது.

இந்த மொழியில் தான் அந்தப் பிள்ளை சிந்திக்கவும் தொடங்குகின்றது. பகலில் இருக்கின்ற சூரியன் எங்கே இரவில் ஒளிந்து கொள்கிறான் அதெப்படி ஆந்தைக்கு இரவிலும் கண் தெரிகின்றது எம்மால் ஏன் பறக்க முடியாது என்றெல்லாம் பிள்ளை தனது வயதுக்கேற்ப சிந்திக்கத் தலைப்பட்டு அதைத் தனக்குத் தெரிந்த தாய் மொழியில் தான் பெரியவர்களிடம் கேட்கிறது.

எனவே எவருக்குமே அவளைப் பெற்றெடுத்தவள் பேசும் மொழிதான் தாய்மொழி. அறிவுவளர, சிந்தனைகளை வெளிப்படுத்துவதும் அந்த மொழியில் தான். வேறு மொழிகளைக் கற்றால் (உதாரணத்திற்கு ஆங்கிலம்) அந்த மொழியிலும் நாம் சிந்தனையை விரிவுபடுத்திக் கொள்கிறோம். தமிழ் நாட்டில் இருப்பவருக்கு தாய் மொழி என்பது தமிழாகவும் பம்பாயில் வசிப்பவருக்கு அதுவே இந்தி மொழியாவதும் இப்படித்தான். இது போல இலங்கையில் தமிழரும் முஸ்லீம்களினதும் தாய் மொழி தமிழ் ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையப்...

"இணைய பாதுகாப்புச்சட்டம்பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள் அமுலில் உள்ளது.

இந்தச் சட்டம் பாராளுமன்ற குழுநிலை விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டியமையால், துறைசார் நிபுணர்கள் சமர்ப்பித்துள்ள திருத்த முன்மொழிவுகளை குறித்த சட்டமூலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு இயலாமல் போயுள்ளது.

இதனால், இந்தத் திருத்தங்களை சமர்ப்பித்துள்ள துறைசார் நிபுணர்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி அடையாளங் காணப்பட்டுள்ள திருத்தங்களின் அடிப்படையில் இந்த சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

இதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கைக்கு...

ளார்.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, முருகன், சாந்தன் உட்பட ஏழு பேர் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, விடுதலை செய்யப்பட்ட இலங்கையர்களான முருகன் மற்றும் சாந்தன் உள்ளிட்டோர் திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## வாகன...

களால் ஐந்து பேர் பலியாகியுள்ளனர்.

குறித்த வாகன விபத்துக்களால் எட்டு பேர் வரை காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

பெலியத்தை, பயாகலை, களுத்துறை, இபோலோகம மற்றும் நாவுல ஆகிய பகுதிகளிலேயே இந்த வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன. (ம-7)

## சுகாதார...

டிய அனைத்து சேவைப் பணிகள் அல்லது உழைப்பு அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ம-7)

## 2024...

ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்திற்குள் நடத்தப்படும் என்பதுடன் குறிப்பிட்ட காலவரையறைக்குள், அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கான நிதி, 2025 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக் குழுவுடன் அரசாங்கம் இணைந்து செயற்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## போராட்டத்தை...

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,

அனைவரையும் பணிக்கு திரும்புமாறும் அழைப்பு விடுக்கின்றேன். ஒவ்வொரு தொழில் வல்லுநர்களும் எங்களுக்கு மிகவும் முக்கியமானவர்கள். சுகாதார சேவையின் மேம்பாட்டிற்கு சுகாதார பணியாளர்கள் நாட்டிற்கு பாரிய சேவையை வழங்குகின்றனர். வைத்தியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு சிறப்பு கொடுப்பனவு வழங்கும் விவகாரம் எல்லா காலத்திலும் பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சுமார் 1300 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அனைத்து அரச ஊழியர்களும் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு 10 ஆயிரம் ரூபாயால் சம்பளத்தை அதிகரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். அதில் ஒரு பகுதி ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு முழுத் தொகையும் கிடைக்கும்.

ஏப்ரல் மாதத்தில் அரச ஊழியர்களுக்கு நிதி அமைச்சு இரண்டு சம்பளம் வழங்க வேண்டும்.

அந்த சூழ்நிலைகள் குறித்து நிதி அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. இந்தநிலையில், நாட்டு மக்களை கவனத்தில் கொண்டு தொழில் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு உதவுமாறும் சுகாதார அமைச்சு என்ற வகையில் அனைத்து தொழில் வல்லுநர்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் இவ்வாறு அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார். (ம-7)

## மனித உரிமைகள்...

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவுக்கு இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் காமென் மொரெனோவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் நடப்பு அரசியல் நிலைமை பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தை பாதுகாத்தலைப் போன்றே தேர்தல்களை பிற்போடுதல் பற்றியும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அத்துடன் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் (Online Safety bill) பற்றியும் இந்த உரையாடலின் போது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதோடு,

இருதரப்பினருக்கும் இடையில் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளல் பற்றியும் கவனம்செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை பிரதிநிதிகள் குழுமத்தின் பிரதிப் பிரதானி லார்ஸ் பிறெடால், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் பங்கேற்றனர். (ம-7)

## குடும்பஸ்தரின்...

கைதடி மேற்குப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான திஹான்குமார் என்ற இளம் குடும்பஸ்தர் அவருடைய வீட்டிலிருந்து சில மணிநேரம் காணாமல் போயிருந்த நிலையிலேயே இவ்வாறு மயானத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவருடைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவருடைய 10 மாதம் நிரம்பிய குழந்தை ஒன்று சில மாதங்களுக்கு முன்னராக உயிரிழந்திருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவருகிறது. (ம-7,30)


லக்கி 7 VIP
திகதி 2024.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 0215
R 3 3 1 5 8 7 R
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.02.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1419
R 10 16 43 64 R
21366
தொலைபேசி : 011 480 7000

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3631
சீட்டிழுப்பு திகதி 13.02.2024
V 17 28 60 79
V 57216
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 0698
கடகம் 07 13 20 36 கடகம்
45218 09

மஹஜன சம்பத
திகதி 2024/02/13
சீட்டிழுப்பு இலக்கம் 5389
J 7 5 8 7 3 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 13/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1737
M 11 11 12 45 61
90521

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 13.02.2024 வெற்றி வாரம் 097 வர்ணம் சிவப்பு
H 1 3 0 2 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,947,908.00
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2363 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.13 தினம் செவ்வாய்க்கிழமை
31 54 70 76 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,396,132/-
DLB

சனிதா
திகதி 2024.02.13 வெற்றி வாரம் 4524 வர்ணம் பச்சை
13 25 37 62 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,144,882.40
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 441
சீட்டிழுப்பு திகதி 2024.02.13
07 48 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,080,080/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4075 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.13 தினம் செவ்வாய்க்கிழமை
27 38 41 50 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,226,294.80
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 39 07 13 59 72
1539
13.02.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 505,873,626.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2189
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2024.02.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,916,254.40
09 29 61 76 K
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
## தரம் 6 அனுமதி தொடர்பான அறிவித்தல்

கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான தரம் 6 மாணவர் அனுமதி 17.02.2024 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

**காலை 9.00 மணிக்கு : 165 இற்கு மேல் புள்ளி பெற்றவர்கள்**

**காலை 11.00 மணிக்கு : 159 - 165 இற்கு இடையில் புள்ளி பெற்றவர்கள்**

அனுமதியை மேற்கொள்வதற்கு உரிய ஆவணங்களுடன் உரிய நேரத்திற்கு பெற்றோர் மட்டும் வருகை தந்து அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி இ.முத்துக்குமாரன்
அதிபர்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
(C-8345)

# டாக்டர் இராமநாதன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பிரபல சித்த மருத்துவரும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் ஓய்வுநிலை விரிவுரையாளருமாகிய டாக்டர் பொ.இராம நாதன் அவர்கள் கடந்த 10 ஆம் திகதி காலமானார்.

சித்த மருத்துவத் துறைக்கு அரும்பணியாற்றிய டாக்டர் இராமநாதன் யாழ். மாநகர சபையின் சித்த வைத்திய அதிகாரியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை தாவடியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18955)

076 825 7716 (ஆகாஸ்)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 702 3565
(19110)

**யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்) (கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk
(18948)


## தமிழர்களின்...

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரன் நேற்றைய தினம் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் அவர்களை, கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கனேடியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் டானியல் வூட், அரசியல் அலுவலர் கணேசநாதன் சாகித்தியனன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்காக சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துரைத்த தூதுவர், ஈழத்தமிழர்களின் அரசியல் நலன்சார்ந்து முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளுக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். (ம-7)


**தரம் 6 - 11**
**Group Classes**
ஆரம்பம் : 15.02.2024

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- ஆங்கிலம்
- சுகாதாரம்
- புவியியல்
- குடியுரிமை
- ICT
- வணிகக் கல்வி
- சிங்களம்
- ஆங்கில இலக்கியம்

தமிழ், ஆங்கில மொழி மூலம்

**NEWTON GROUP CLASSES**
No.18/18,Wyman Road, Nallur.
☎-077 792 3653
(18992)


# மரண அறிவித்தல்



பிறப்பு 04 - 02 - 1950

இறப்பு 13 - 02 - 2024

## மங்களராணி மகாதேவன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், கலைப் பட்டதாரி - வசாவிளான் மகா வித்தியாலயம்)

குரும்பசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல. 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களராணி மகாதேவன் அவர்கள் நேற்று (13.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம்-அன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் ஆறுமுகம்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஆறுமுகம் மகாதேவனின் (முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், முன்னாள் யாழ். இந்துக் கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியர்) அன்பு மனைவியும் மங்களவதனியின் (ஆசிரியர், யா/சன்மார்க்க வித்தியாலயம்) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வாமதேவன் (பொறியியலாளர்) மற்றும் சக்திதாசன் (France), உதயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவரூபன், சுவஸ்திகா ஆகியோரின் அன்பு பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
மங்களவதனி- 077 834 6282
(19112)
தகவல்: குடும்பத்தினர்


**Show Money**

விசா பெற்றுக்கொள்வதற்கான Show money வசதி சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 075 592 5372
(19107)

**மெட்டி ஒலி திருமண சேவை**

சூரியன் செவ்வாய் வெளிநாட்டுப் பெண் 3 மாதத்தில் விவாகரத்துப் பெற்றவர் மற்றும் சூரியன் செவ்வாய் ஐரோப்பா மணமகன் ஆகியோருக்கு மணமகன் மற்றும் மணமகள் தேவை. அத்துடன் உங்கள் தகுதிக்கேற்ப மணமகன், மணமகள் பார்த்து தரப்படும். (18982)

074 026 6554, 077 889 4353
0094764752219(Whatsapp,Viber only)

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8350)

**கணக்கீடு**
புதிய பிரிவு A/L 2025, 2024

- கட்டண உயர்வாலும்
- கற்பதில் சிரமத்தாலும்
- இடம், பாடம், பிரிவு மாறிக் கற்க விரும்பும் மாணவர்களுக்கான நேரடி Zoom ஊடான விசேட வகுப்புக்கள் ஆரம்ப அலகிலிருந்துஆரம்பம்.

இம்முறை இறுதிப் பரீட்சை எழுத விரும்புகின்றவர்களுக்கான விசேட விரைவான வகுப்பு.

**S.தவா**
தகவல் அறிய : 077 239 5858
(19100)

**CCTV Technician, Electrician தேவை**

யாழ் மத்தியில் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு சிசிடிவி Technician மற்றும் Electrician தேவை. பயிலுனர்களும் விண்ணப்பிக்க முடியும். அட்டகாசமான சம்பளம் வழங்கப்படும்

076 989 9977
077 868 8517
(18993)

**கனடா, அவுஸ்திரேலியா**

தற்காலிக நடைமுறைகளை விடுத்து கனடா மற்றும் அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக குடியேறலாம். வெளிநாடு ஒன்றில் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கள்

Unicorn Facilitators Pvt Ltd
(A Facilitating company in Jaffna)
076 881 7694, 077 139 2130
spraj54@gmail.com
(19108)

**காணி விற்பனைக்கு**

யாழ் கொழும்புத்துறை சந்தி அருகில் கடற்கரை வீதி ஹெலன் தோட்டத்தில் 1 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
074 006 0269
(18997)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... அவர்களது அச்சகத்தில் 14.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org